மதுரமுரளி Rs. 5/-
Registered as Newspaper in India R. No. 62828 / 95

| Regd. No. TN / PMG (CCR) / 521 / 03 - 05 | Licensed to Post without prepayment WPP No. 319 / 03-05 |
|---|---|

| வேணு : 10 | பிப்ரவரி - 2005 | கானம் : 7 |
|---|---|---|




ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதன்

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 83. ✆ 2371 0110 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org; e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள்

| வேணு : 10 | பிப்ரவரி - 2005 | கானம் : 7 |
|---|---|---|

www.madhuramurali.org



ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாள்





நாகை மாவட்டத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு
**GKR CHARITIES, MUMBAI, CHENNAI** நடத்திவரும்,
**G.S.** கல்யாணசுந்தரம் மருத்துவமனையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட
மருத்துவமுகாம் மற்றும் நிவாரண பணிகளை நம் ஸ்வாமிஜி மேற்பார்வையிடுகிறார்.

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

| வேணு : 10 | பிப்ரவரி 2005 | கானம் : 7 |
|---|---|---|

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அம்மாளு அம்மாள் அவர்களின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 110 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 4 |
| 4. | வேத கதைகள் - 91 | 5 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 82 | 7 |
| 6. | ச்ரவணத்தின் அவசியம் | 10 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 85 | 11 |
| 8. | ஸ்ரீ நாரதர் | 14 |
| 9. | பகவானின் லீலை | 16 |
| 10. | பிரார்த்தனை | 23 |
| 11. | மாலே மணிவண்ணா - 29 | 26 |
| 12. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 29 | 29 |


*காமிநீ வேஷதாரிகி ஸாத்வீகி*
*நடதலு ஏமைன தெலுசுனா?*
*ஸீதா ராமா நீயெட ப்ரேம*
*ரஹிதுலுகு நாமருசி தெலுசுனா?*

ஸ்திரீ வேஷம் போட்டவனுக்கு கற்பின் நடத்தை தெரியுமா?
ராமா உன்னிடம் அன்பில்லாதவனுக்கு உன் நாம ருசி தெரியுமோ?

**— ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள்**

ஸ்ரீ ஹரி:

# அம்மாளு அம்மாள் அவர்களின் கீர்த்தனம்

*பல்லவி*

*நம்பிதவரிகே கேடில்லா*
*நம்பிதவரிகே பயவில்லா (நம்பி)*

*அனுபல்லவி*

*அம்புஜநாப ஆனந்தஸ்வரூப*
*அயோத்யராம என்னுத்தா (நம்பி)*

*சரணங்கள்*

*பக்தர பென்(னு)ஹிந்தே திரிகிரிவா*
*பக்தர கூடலே திரிகிரிவா*
*பக்தரிகே பந்த ஆபத்துக்கள*
*பரிகாரவன்னே மாடிருவா (நம்பி)*

*முரளீதரனாகே இருவ*
*கொளல ஹாவினல் ஆடிருவ*
*தொளல கோபியர கூடி*
*கோலாட்டவன்னே ஆடிருவ (நம்பி)*

*பக்தர ஆதீனா அவனு*
*பக்தர நுடியே நடியுவனு*
*பக்த வத்ஸல அம்மாளுப்ரிய*
*ப்ரகடனவாகியே நெலயுவனு (நம்பி)*

## 110

சென்னையை அடுத்துள்ள திருமுல்லைவாயில், நாயன்மார்களால் பாடல்பெற்ற தலம் என்பது எல்லோரும் அறிந்ததே! ஆனால், அங்கேயே ஒரு வைஷ்ணவி ஆலயம் அமைந்துள்ளது பலருக்குத் தெரியாது. வைஷ்ணவி ஆலயம் என்று சொல்வதைவிட வைஷ்ணவி ஆஸ்ரமம் என்று சொல்வது, மிகவும் பொருத்தமாக இருக்கும். அவ்வளவு அமைதியான, ரம்யமான, தெய்வீக மணம் கமழும் இடம் அது. சாது பார்த்தசாரதி என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. அவருக்கு வள்ளிமலை ஸ்வாமிகள்தான் குரு.

சாதுராம் ஸ்வாமிகளுக்கு சன்யாஸம் வாங்கிக்கொள்ள இந்த அம்மனிடமிருந்துதான் உத்தரவு வந்தது. ஆண்டவன்பிச்சையும் பலகாலம் இந்த ஆஸ்ரமத்தில் ஏகாந்தத்தில் தங்கியிருந்தார். மார்கழி மாதத்தில் கோபிகைகள் எல்லோரும் காத்யாயனீ தேவியைத்தானே பூஜை செய்தனர்! அதுபோல், நம் ஸ்வாமிஜியும், மார்கழி மாதத்தில் காத்யாயனீ ஆன இந்த வைஷ்ணவி ஆலயத்திற்குச் சென்று, வைஷ்ணவிதேவிக்கு தானே ஆரத்தி செய்து வழிபட்டார்.

இந்த தேவி, பார்ப்பவர்களின் உள்ளத்தை கொள்ளை கொள்ளக்கூடிய அளவில் அமைந்திருக்கின்றாள். சைதன்யமயமானவள். பேசக்கூடிய தெய்வம். பக்தர்கள் ப்ரார்த்திக்கின்ற வரங்களை எல்லாம் அள்ளி வழங்கக்கூடியவள். நேரம் கிடைக்கும்பொழுது, இந்த வைஷ்ணவியை, ஒருமுறை அனைவரும் தர்சனம் செய்ய வேண்டும்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : சில கோவில்களில் தெய்வம் உக்ரஹமாக இருக்கின்றது என்கின்றார்களே. அந்த தெய்வத்தினுடைய உக்ரஹத்தை குறைக்க என்ன செய்ய வேண்டும்?*

பதில்: பானகம், மோர், பலவிதமான பழரசங்களை நிவேதனம் செய்வதால் உக்ரஹம் தணிந்து சாந்தம் ஏற்படும்.

*கேள்வி : ராமருடைய தியாகம் பெரியதா? அல்லது பரதனுடைய தியாகம் பெரியதா?*

பதில்: இதே கேள்வியை ஒரு பக்தர் யோகி ராம்சுரத்குமார் அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர் கூறிய பதிலையே இங்கு தெரிவிக்கின்றேன். ''ராமருடைய தியாகம்தான் பெரியது. ஏன் என்றால் பரதனுக்கு தியாகம் செய்யவேண்டும் என்ற எண்ணமே ராமரைப் பார்த்துதான் ஏற்பட்டது'' என்று கூறினார்.

*கேள்வி : தியானத்தில் மனசாந்தி கிடைக்குமா? அல்லது மனதினுடைய சக்தி அதிகரிக்குமா?*

பதில்: சாந்தி ஏற்படுவதனாலேயே சக்தி ஏற்படும். நம்முடைய மனதில் சந்தேகம், மனதுக்குள்ளேயே வாக்குவாதம், காமசிந்தனை, பலவிதமான மன போராட்டங்கள் இவற்றினால் மனதினுடைய சக்தி விரயமாகின்றது. இவற்றையெல்லாம் எண்ணாமல் மனது ஒரு தெய்வத்தையோ அல்லது நாமத்தையோ பிடித்துக்கொள்ளும்பொழுது விரயமாகாமல் மனதின் சக்தி காக்கப்படுகிறது. ஆகவே, தியானத்தினால் சாந்தி மட்டும் அல்லாமல் பெரிய சக்தியும் பிறக்கும்.

**ஸ்ரீ ஹரி:**

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில், மஹாரண்யம்**

பக்தர்களின் தரிசனத்திற்காக கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.30 மணி முதல் 11.30 மணி வரை
மாலை 3.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை

# வேதகதைகள்- 91

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

ஒரு தேசத்தில், ஒரு காலத்தில், ஸலாவதர் என்பவரின் பிள்ளை சிலகர் என்று பெயர் பெற்றவர்; சிகிதாயனர் பிள்ளை தெல்ப கோத்ரத்தில் பிறந்தவர் தால்ப்யர் என்பவர்; ஜீவலருடைய பிள்ளை விரவாஹனன் என்பவர்; இம்மூவரும் ஸாம வேதத்தில் திறமை பெற்றவர்களாக இருந்தனர். இவர்களைத் தவிர திறமைசாலிகள் இல்லை என்று கூற முடியாது. ஏனென்றால், உலகில் ஆயிரக்கணக்கான அறிவாளிகள் தோன்றியும் மறைந்தும் இருக்கின்றனர். ஆதலால்தான், ஏதோ ஒரு சமயத்தில் மட்டும் இம்மூவரும் ஒன்று சேர்ந்திருந்தனர். அப்பொழுது, நாம் மூவரும் கற்ற கலையில் ஆராய்ச்சி செய்வோம் என்று தீர்மானித்தனர். இதற்கு தத்வித்யஸம்யோகம் என்று பெயர். ஒரே கலையைச் சார்ந்தவர்கள் ஆராய்ச்சி செய்தால் மாறாக தெரிந்துகொள்வது மறையும். அபூர்வமான அறிவு ஏற்படும். சந்தேகம் விலகும். ஆதலால், ஆராய்ச்சி அவசியமாகிறது.

அதில், ஜெய்விலி என்பவர். மற்ற இருவரையும் பார்த்து நீங்கள் இருவரும் முதலில் கூறுங்கள். நான் கேட்கிறேன் என்றார். இதிலிருந்து ஜெய்விலி என்பவர் க்ஷத்ரியர் என்பது தெரிகிறது. இம்மூவரும் விசாரம் செய்யும்பொழுது, பல விஷயங்களை ஆய்வு செய்தனர். ஆய்வு செய்யும்போது, ஒருவர் கொஞ்சம் தவறுதலாகக் கூறிவிட்டார். உடனே மற்றொருவர் தவறுதலாகப் பேசினவரைப் பார்த்துக் கூறினார். - 'உன் தலை வெடிக்கட்டும்' என்று நான் கூறினால், உன் தலை நிச்சயமாக வெடித்துவிடும். இங்கு ஒரு சந்தேகம் எழுகிறது. தலை வெடிக்கக்கூடிய குற்றம் செய்தவன் 'உன் தலை வெடிக்கட்டும்' என்று கூறாவிட்டாலும் அவன் தலை வெடித்துதான் ஆகவேண்டும். அப்படியிருக்கும்போது உன் தலை வெடிக்கட்டும் என்று சாபம் கொடுப்பது வீணாகுமே' என்று சந்தேகம் எழுகிறது' என்றார்.

சாஸ்திரங்கள், நல்ல கர்மாவோ, கெட்ட கர்மாவோ, அது பயனளிப்பதில் தேச, கால நிமித்தங்களை எதிர்பார்க்கிறது. ஆதலால், தலை வெடிக்கும் குற்றம் செய்தாலும்கூட அது தேச, கால, நிமித்தங்களை

எதிர்பார்த்துதான் ''தலை வெடிக்கும்''. அதனால், தலை வெடிக்கும் குற்றம் செய்தும்கூட, தானாகவே வெடிக்கவேண்டுமே என்ற கேள்விக்கே இடமில்லை. அதனால்தான் நாம் குழந்தைப் பருவத்தில் 'ஸந்த்யா வந்தனம்' முதலிய கர்மாக்களை செய்யும் போது சரியாக தெரிந்துகொள்ளாமலும், குறையுடன் செய்தாலும், அது நம்மை பாதிப்பதில்லை. ஆதலால்தான் அறிவு பெருக பெருக, நன்கு புத்தகங்களைப் படித்து முறைப்படி செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. எதையும் நன்கு தெரிந்துகொண்டு செய்தால், அதற்கு பயன் அதிகம் ஏற்படுகிறது.

இச்சிறுகதையால் நமக்கு பல உண்மைகள் புலனாகின்றன. அறிவாளிகள் ஒன்று சேர்ந்தால் கற்ற கலையை நன்கு ஆய்வு செய்ய வேண்டும். ஆய்வு செய்யும்பொழுது உயர்ந்தவர்கள் இருந்தால், அவர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். கற்ற கலையை நன்கு அறிந்துகொள்ள வேண்டும். இச்சிறுகதை ''ஸாம வேதத்தில்'' இருக்கிறது.

ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள் :**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassette, Audio CD |

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

# எந்தரோ மஹானுபாவுலு - 82

மஹாப்ரபு, வெகு தூரம் சென்றுவிட்டார். ப்ரேமை அதிகரிக்க சில இடங்களில் விழுந்து புரளுவார். மணிக்கணக்கில் மூர்ச்சையாக இருப்பார். பிறகு, தானே எழுந்திருந்து மறுபடி அழுவார். அவரது அழுகுரல் வெகு தூரம் வரை கேட்கும். அவரது அழுகையைக் கேட்டவுடனேயே மக்கள் புளகாங்கிதம் அடைந்தனர். கேட்டவர்கள் ஆனந்தமயமாகி ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்துகொண்டு நாட்டியம் ஆடிக்கொண்டே அந்த குரலை அனுமானம் செய்து கொண்டு ப்ரபுவை நோக்கி ஓடினார்கள்.

முகுந்ததத், ''ஸ்ரீ க்ருஷ்ண கோவிந்த ஹரே முராரே! ஹே நாத நாராயண வாஸுதேவ'' என்று தன் இனிய குரலில் நாம சங்கீர்த்தனம் செய்தார். அதைக்கேட்டதும், ப்ரபு ஆனந்த மேலீட்டால் நடனம் செய்தார். பக்தர்கள் ஓடிவந்து அவரை தரிசித்து தாங்கள் இழந்த செல்வத்தை மீண்டும் அடைந்தனர். சிறிது நேரத்தில் ப்ரபு தன் சுய நினைவை அடைந்தார். தன் பக்தர்களைப் பார்த்து, ''நீங்கள் வெகு தூரம் வந்துவிட்டீர்கள். உங்களிடம் நான் ஒன்று கூற விரும்புகிறேன்'' என்றார்.

அனைவரும் ஆர்வத்துடன் ப்ரபுவின் முகத்தையே நோக்கினர். ப்ரபு, ''எனக்கு பூரி ஜகன்னாத க்ஷேத்ரத்திற்கு செல்லுமாறு பகவானின் உத்தரவு ஏற்பட்டுள்ளது. பூரியில் அச்சுத பகவான் என்னை உடனே வரும்படி அழைக்கிறான். எனவே, நான் நீலாசலத்தை நோக்கி செல்லப்போகிறேன். பூரிக்குச் சென்று என்னுடைய ஸ்வாமியை தரிசிக்கப் போகிறேன்'' என்றார். ப்ரபுவின் பேச்சைக் கேட்ட பக்தர்கள் ஆனந்தமடைந்தனர். பக்தர்களின் மலர்ச்சிக்காக ப்ரபு என்ன செய்வார் என்பதை யார்தான் அறிவர்? ப்ரபு மேற்கு நோக்கி நடக்காமல் இப்போது கிழக்கு நோக்கி பூரி க்ஷேத்ரத்துக்கு நடக்கலானார்.

அதுவரை ராட தேசத்தில் பகவன் நாம ஸங்கீர்த்தன ப்ரசாரம் நடைபெற்றிருக்கவில்லை. அந்த தேசத்து நிலையைக் கண்டு வருந்திய மஹாப்ரபு, நித்யானந்தரை நோக்கி, ''ஸ்ரீ பாத்! இந்த தேசத்தில் எங்குமே நாமசங்கீர்த்தன த்வனி கேட்கவில்லை.

யாருடைய வாயிலும் பகவன்நாம உச்சாரணமே இல்லை. பக்தி சூன்ய தேசமாக இருக்கிறதே! நாமம் கேட்காத என் ஜீவன் வ்யர்த்தம்! இப்படி நடக்கும் நடை வீண்தான்'' என்றார். அதற்குள் காட்டு ப்ரதேசம் வந்துவிட்டது. அங்கு பசுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன. ப்ரபுவைக் கண்டதும் பசுக்களில் சில மேய்ச்சல் மறந்து அவரையே நோக்கின. சில தனது வாலை அசைத்துக் கொண்டு ப்ரபுவை நோக்கி ஓடின. அவரைச்சுற்றி சுற்றி வந்தன. மாடு மேய்க்கும் இடையர்கள் கம்பளி போர்த்திக்கொண்டு கையில் கழியுடன் ப்ரபுவைப் பார்த்து ஓடிவந்து அவரைக் கண்டதுமே ''ஹரிபோல் ஹரிபோல்'' என்று கூவ ஆரம்பித்தனர். அந்த இடைச் சிறுவர்கள் வாயில் ஸ்ரீ ஹரியின் மதுர மதுர காதுக்கினிய நாமங்கள் உண்டாவதைக் கண்டு ப்ரபு எல்லை இல்லாத இன்பத்தை எய்தினார். உடன் அவருக்கு வ்ருந்தாவனத்தின் த்யானம் ஏற்பட்டது.

உடனே ப்ரபு, அந்த இடையர்களருகே சென்று அவர்கள் சிரத்தினில் தன் கமலக் கரங்களை வைத்து, ''இன்னும் சொல்லுங்கள்! இன்னும் சொல்லுங்கள்! ஹரி! ஹரி! என்று கூறுங்கள்'' என்று கூறினார். குழந்தைகளும் ஆனந்தத்துடன் ஹரிநாமம் சொல்ல, ப்ரபு குதூகலம் அடைந்து குழந்தைகளுடன் விளையாட ஆரம்பித்தார். அவர்களுடன் ஆசையாக சம்பாஷித்தார். பிறகு அவர்களிடம், ''இங்கிருந்து கங்கை எவ்வளவு தொலைவில் உள்ளது'' என வினவினார்.

உடனே ஒரு துடிப்பான பையன், ''மஹாராஜ்! கங்கை இங்கிருந்து அருகில்தான் இருக்கிறது. இரண்டு மூன்று மணிநேர நடையில் அடைந்துவிடலாம்'' என்றான். ப்ரபுவும், மகிழ்ந்து, ''கங்காமாதாவின் ப்ரபாவத்தால்தான் இந்த சிறுவர்களும் பகவன் நாமம் கூறுகிறார்கள். ஜகன்மாதா, பகவதி, பாகீரதியின் சக்தி எப்பேர்ப்பட்டது என்றால் அவள் கரையில் வாழும் பன்றிகள்கூட ஹரிநாமப் பிரியர்களாகி விடுவார்கள். இப்படியே பேசிக்கொண்டு நடந்து மாலையில் கங்கையை அடைந்தனர். கங்கையைக் கண்டதும் கரம் கூப்பி வணங்கி, ''ஹே கங்கை அன்னையே! நீ உண்மையிலேயே உலகிலுள்ளோரின் பாபத்தைப் போக்குபவள்! ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனாலும் உன் புகழைப் பாட முடியாது. தாயே! நீதான் ஆதி சக்தி! நீதான் ப்ரஹ்மாணி! நீதான் ருத்ராணி!

நீதான் சாக்ஷாத் மஹாலக்ஷ்மி! தேவாதி தேவனான மஹாதேவன் உன்னை சிரஸ்ஸில் தரித்துள்ளார். பகவானின் சரண கமலத்திலிருந்து நீ உத்பத்தியானாய்! ஜனனீ! உன் சரணங்களில் என் கோடி கோடி நமஸ்காரங்கள். மங்களமான தாயே! எங்களுக்கு நன்மை புரிவாய்! என்று விதவிதமாக ஸ்தோத்திரம் செய்தார். பிறகு சிறிது கங்காஜலத்தை எடுத்து ஆசமனம் செய்துவிட்டு கங்கையில் நீராடினார். அருகில் உள்ள ஒரு கிராமத்தில் இரவை அனைவரும் கழித்தனர்.

அடுத்த நாள் காலை நித்யானந்தரிடம் பரபு, ''ஸ்ரீபாத்! நீங்கள் நவத்வீபம் சென்று சசீமாதா மற்றும் அனைத்து பக்தர்களுக்கும் நான் இங்கு வந்துள்ளேன் என்று செய்தி சொல்லுங்கள். நீங்கள் நவத்வீபம் செல்வதற்குள் நான் அத்வைதாசார்யரை தர்சனம் செய்ய சாந்திபுர் வந்துவிடுவேன். அங்கு அனைவரையும் சந்திப்பேன். சீக்கிரம் செல்லுங்கள்'' என்று துரிதப்படுத்தினார். ப்ரபுவின் ஆணையைக் கேட்டு நித்யானந்தர் கங்கையில் நீந்திச்சென்று நவத்வீபம் சென்று அடைந்தார். அதற்குள் ப்ரபுவும், கங்கைக்கரையோரம் நடந்து சாந்திபூருக்கு மறுகரையிலுள்ள ஹரிதாஸின் ஆச்ரமம் அமைந்து உள்ள புலியா என்ற கிராமத்தை அடைந்து அங்கு தங்கினார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

ஒருவருக்கு வருங்காலத்தை அறியும் சக்தி இருந்தது. அவர் தனது நண்பருக்கு வருங்காலத்தில் ஒரு தேதி குறிப்பிட்டு அன்று ஒரு விபத்து நேரிடும் என்று எச்சரித்தார். எத்தனை முயன்றும் அதை தடுக்க முடியாது என்றும் தெரிவித்தார். ஆனால் அவர் சொன்ன தேதியில் விபத்து ஒன்றும் நடக்கவில்லை. நல்லவேளை தன் நண்பருக்கு விபத்து நடக்கவில்லையே என்று அவர் நினைக்கவில்லை. தான் சொன்னது பலிக்காமல் போய்விட்டதே என்று கவலைப்பட்டார். மனிதனின் ''தான்'' என்னும் எண்ணம் அத்தகையது!

**— ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

# ச்ரவணத்தின் அவசியம்

**– ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

பல கோடி ஜன்மாக்களாக உலக விஷயங்களிலேயே செலுத்தப்பட்ட மனதை தெய்வீகமான விஷயங்களில் செலுத்துவது மிகவும் சிரமம். அநேகமாக, தவறு செய்பவர்களுக்கெல்லாம் தாம் செய்வது தவறு என்று நன்றாகத் தெரியும். இருந்தும், பழக்க வாசனையால், அவர்களால் தவறுகள் செய்யாமலிருக்க முடியவில்லை. ஏதோ ஒரு ஊருக்குச் சென்றுவிட்டு வந்த ஒருவர் அவ்வூரைப் பற்றி அழகாக வர்ணிப்பதைக் கேட்டு, நமக்கும் அங்கு போக வேண்டும் என்ற ஆவல் உண்டாகிறதல்லவா? அதுபோல், சில விஷயங்களைப் பற்றிப் படிப்பதாலும், பார்ப்பதாலும், ஆவல் உண்டாவதும் நிஜம். படிப்பதாலும் பார்ப்பதாலும் ஏற்படும் ஆவலைக் காட்டிலும் கேட்பதினால் ஏற்படும் ஆவல் அதிகம் என்பது நமக்கே நன்றாகப் புரியும். அதுபோல், தெய்வீக விஷயங்களையும், மஹாத்மாக்களைப் பற்றியும் நாம் ச்ரவணம் செய்ய வேண்டும்.

இது மாதிரியான விஷயங்களை ஒரு முறை கேட்டாலோ, ஒரு முறை படித்தாலோ மட்டும் போதாது. மனது சிறிது காலம் சாத்வீக விஷயங்களில் ஈடுபட்டுவிட்டுப் பிறகு வழக்கம் போல உலக விஷயங்களுக்குச் சென்றுவிடும். மனதானது உலக விஷயங்களில் ஈடுபடாமல் எப்பொழுதும் சாத்வீக விஷயங்களிலேயே நிலைத்திருக்கும் வரை நாம் ச்ரவணத்தை விட்டு விடக்கூடாது. நவவித பக்தியில் ச்ரவணமும் ஒன்றாகும். மேலும், பரீக்ஷித் மஹாராஜா ச்ரவணம் ஒன்றினால் மட்டுமே மோக்ஷத்தை அடைந்துள்ளார். தேவை இல்லாத விஷயங்களைப் பேசிக்கொண்டிருப்பவரிடமிருந்து அவைகளைக் கேட்பதும் தவறு. நல்ல விஷயங்களைச் சொல்பவரிடம் அவைகளைக் கேட்காமலிருப்பதும் தவறு. உலகத்தில் உள்ள எந்த ஜீவராசிக்கும் இல்லாத வாக்கு என்னும் சக்தியை ஈச்வரன் நமக்கு அளித்துள்ளான். அது எதற்காக என்றால், அதை வைத்துக் கொண்டு, அவனைப் பற்றிப் பேசிக்கொண்டு, அவனை அடைய வேண்டும் என்பதற்காகவே. இதற்கு வாக்கு தேவதையான சரஸ்வதி நமக்கு எல்லோருக்கும் அனுக்ரஹம் செய்யட்டும்.

# பாலகர்களுக்கு ஒரு கதை – 85

## எது வாய்மை ?

மஹாபாரதப் போரின் முடிவில் துரியோதனன் தலைமையிலான கௌரவப்படைகள் தோற்கடிக்கப்பட்டனர். பாண்டவர்கள், போரில் களைத்திருந்தனர். களைப்பைப் போக்க அனைவரும் க்ருஷ்ணனுடன் அடுத்தநாள் காலை சுற்றுலா செல்ல தீர்மானித்தனர். மறுநாள் காலை, கிளம்பும்பொழுது, த்ரௌபதியை உடன் அழைத்துச் செல்லாமல் அவர்கள் தங்கியிருந்த முகாமிலேயே விட்டுச் சென்றனர். க்ருஷ்ணனின் ஒப்புதலுடன் தங்களின் வில், அம்பு, கதை போன்ற ஆயுதங்களை தங்கள் முகாமிலேயே விட்டு மதிய உணவிற்காக சில பொட்டலங்களைத் தயார் செய்து எடுத்துச்சென்றனர்.

காட்டிற்குள் மூன்று, நான்கு மணி நேரம் நடந்து சென்ற பிறகு, எங்கிருந்தோ ஒரு வேடன், திடீரென்று அவர்கள் முன் தோன்றி, க்ருஷ்ணனின் காதில் மட்டும் ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டு மறைந்தான்.

அதைக் கேட்ட க்ருஷ்ணன், தீவிர யோசனையில் ஆழ்ந்தார். அவரது முகத்தில் ஆழ்ந்த கவலையும், பரபரப்பும் காணப்பட்டது. அவர் பாண்டவர்களிடம், அஸ்வத்தாமா அவனது தந்தையான துரோணாச்சாரியாரையும், உயிர் நண்பனான துரியோதனனையும் போரில் கொன்ற பாண்டவர்களை வஞ்சம் தீர்ப்பதற்காக தன்னிடம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு ரதத்தில் வந்துகொண்டிருப்பதாக கூறினார். இதைக் கேட்ட பாண்டவர்கள் அதிர்ச்சியுற்றனர். தங்கள் முகாமிற்கு சென்று தங்கள் ஆயுதங்களை எடுத்து வர அவர்களுக்கு போதிய அவகாசம் இல்லை. என்ன செய்வது என்று தவித்தனர்.

அப்பொழுது, க்ருஷ்ணர் உடனே, அவர்களிடம், அருகில்தான் துர்வாச முனிவரின் ஆஸ்ரமம் அமைந்திருப்பதைக் கூறினார். துர்வாச முனிவரின் கோபம் அனைவரும் அறிந்ததே! பலரும் அவர் சாபத்திற்கு ஆளாயிருக்கின்றனர்.

இப்படி இருக்கையில், க்ருஷ்ணர், பாண்டவர்களுடன் துர்வாச முனிவரின் ஆஸ்ரமத்திற்குச் சென்றார். துர்வாச முனிவரைக் கண்டதும், அஸ்வத்தாமா வருவதைப் பற்றி தனக்கு கிடைத்த தகவலை கூறி, பாண்டவர்களுக்கு சிறிது நேரத்திற்கு தஞ்சம் அளிக்கும்படி வேண்டிக்கொண்டார். துர்வாச முனிவர், பகவான் க்ருஷ்ணனிடம் மிகவும் மரியாதையுடனும், பக்தியுடனும், அதே சமயத்தில் தயக்கத்துடன், ''ஹே க்ருஷ்ணா! இந்த ஆஸ்ரமத்தில் ஒரே ஒரு அறைதான் உள்ளது. பாண்டவர்கள் மறைந்துகொள்ள ஏதுவாக அலமாரிகளோ, பெட்டிகளோ எதுவும் இல்லை. பாண்டவர்களை நான் எங்கு மறைத்து வைப்பது? நீ என்ன சொல்கிறாயோ அதன்படியே நான் செய்கிறேன்'' என்று கூறினார்.

அதற்கு க்ருஷ்ணர், துர்வாசரிடம், அவர் அமர்ந்திருந்த ஆசனத்தைத் தருமாறு கேட்டு, அருகிலிருந்த பீமனை அழைத்து, துர்வாசர் அமர்ந்திருந்த இடத்தில் பாண்டவர்கள் அனைவரும் மறைந்துகொள்ளும் அளவிற்கு ஒரு பெரிய பள்ளத்தை தோண்டச் சொன்னார். அதன்படியே பள்ளம் தோண்டப்பட்டு, பாண்டவர்களும் அதில் மறைந்துகொண்டனர். அந்த பள்ளம் தெரியாதபடி அதன் மீது ஒரு மேல் விரிப்பை விரித்து, அதன்மேல் துர்வாசர் அமருவதற்காக புலித்தோல் ஆசனமும், அதற்குமேல் கம்பளத்தையும் விரித்து, துர்வாசரை அமரச்சொன்னார்.

க்ருஷ்ணன் அந்த இடத்திலிருந்து கிளம்ப முற்படும்பொழுது, துர்வாசர் க்ருஷ்ணரிடம், ''தயவுசெய்து நான் சொல்வதை கவனியுங்கள். நான் ஒருக்காலும் பொய் பேசமாட்டேன். அஸ்வத்தாமா, என்னுடைய நெருங்கிய நண்பனாக இருப்பதால், நிச்சயமாக பாண்டவர்கள் இருக்கும் இடத்தைப் பற்றி கேட்பான். அப்பொழுது, பாண்டவர்கள் ஒளிந்திருப்பதைப்பற்றி நான் கூற வேண்டியிருக்கும்'' என்று விண்ணப்பித்துக்கொண்டார்.

ஸ்ரீ க்ருஷ்ணன் உடனே, சற்றும் அசராமல், ''உங்களை யார் பொய் சொல்லச் சொன்னது? நீங்கள் எப்பொழுதுமே உண்மையையே பேசுங்கள். ஆனால், அஸ்வத்தாமா கேட்கும்பொழுது, நான் சொல்லும் விதத்தில் அவனிடம் உண்மையைக் கூறவும்'' என்று அவருடைய காதில் ரகசியமாக ஒரு விஷயத்தைக் கூறிவிட்டு க்ருஷ்ணர் கிளம்பிச் சென்றார்.

அவர் சென்ற சற்று நேரத்தில், அஸ்வத்தாமா முனிவரின் ஆஸ்ரமத்திற்கு வந்தான். துர்வாச முனிவரை வணங்கிய அஸ்வத்தாமாவை மகிழ்ச்சியுடன் வரவேற்ற துர்வாசர் அவனுடைய நலன்களை விசாரித்தார். சிறிது நேரம் முனிவரிடம் பேசிக் கொண்டிருந்தான். பிறகு சாந்தத்துடன் இருக்கும் முனிவரிடம் அஸ்வத்தாமா, சாதாரணமாக பேசத் துவங்கினான், ''முனிவரே, நான் பாண்டவர்களைத் தேடி வந்துகொண்டிருந்தேன். அவர்கள் திடீரென்று இந்த ஆஸ்ரமத்தின் அருகில் காணாமல் மறைந்தனர். தங்களுக்கு அவர்கள் சென்ற வழியைப் பற்றி ஏதாவது தெரியுமா?'' என்று மிகுந்த பணிவுடன் வினவினான்.

இதைக் கேட்ட துர்வாசர், மிகுந்த கோபத்துடன் தன் ஆசனத்தைவிட்டு விருட்டென்று எழுந்தார். அவருடைய முகம் கோபக்கனலைக் கக்கியது. அவர் தான் அமர்ந்திருந்த ஆசனத்தைக் காட்டி, ''ஆமாம், நான் அவர்களை என் ஆசனத்தின் கீழேதான் ஒளித்து வைத்திருக்கிறேன். நீ போய் அவர்களைப் பிடித்துக்கொள்'' என்று ஆக்ரோஷமாக பதிலுரைத்தார். முனிவரின் கோபத்தைக் கண்ட அஸ்வத்தாமா மிகுந்த மரியாதையுடன், ''முனிவரே! நான் தங்களிடம் சாதாரணமாக, ஒரு கேள்வியைத்தான் கேட்டேன். அதற்காகத் தாங்கள் என்மேல் ஏன் இவ்வளவு கோபப்படுகிறீர்கள்? தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள். நான் சென்று விடுகிறேன்'' என்று கூறி அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான்.

இங்கே துர்வாசர், உண்மையைத்தான் கூறினார். ஆனால், அஸ்வத்தாமாதான் அதை நம்பவில்லை. அதனால், பாண்டவர்கள் உயிர் தப்பினர். ஆகவே, குழந்தைகளே! நாம் எல்லோரும், எல்லா தருணத்திலும், உண்மையைத்தான் பேச வேண்டும். ஆனால், இக்கட்டான நிலை வரும்போது யாருக்கும் தீங்கு வராதவகையில் உண்மையைப் பேச வேண்டும் அல்லது பதில் சொல்வதைத் தவிர்க்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் சொல்லும் உண்மையினால் யாருக்கும் எந்த தீங்கும் ஏற்படாது.

—ஸ்ரீ சாந்தானந்தபுரி மஹராஜ் அவர்களின்
**Stories for Meditation**
என்ற நூலிலிருந்து தமிழாக்கம்.

# ஸ்ரீ நாரதர்

ஒரு சமயம், யுதிஷ்டிரர் பீஷ்மரிடம் தத்வோபதேசம் கேட்கும்பொழுது, ''எல்லா ஸத்வகுணங்களும் நிரம்பியவர் யார்?'' என்று கேட்டார். அதற்கு பீஷ்மர், உக்ரசேன மஹாராஜாவுக்கும் பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கும் நடந்த ஒரு ஸம்பாஷணையைக் கூறினார்.

ஒரு சமயம், உக்ரசேனர் க்ருஷ்ணரிடம், ''க்ருஷ்ணா! இவ்வுலகம் நாரதரை மிகவும் உயர்வாகக் கொண்டாடுவதால் அவர் ஸத்வ குணங்கள் நிறைந்தவர் என்று நினைக்கிறேன். அவருடைய உயர்வை எனக்கு தெரிவிக்க வேண்டுகிறேன்'' என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ க்ருஷ்ணன், ''மஹாராஜா! நாரதருடைய உயர்வை சுருக்கமாக சொல்கிறேன், கேளும்.

நாரதர் உயர்ந்த சீலம் உடையவர். அழிவிற்கு காரணமான அஹங்காரமற்றவர். கோபம், சபலம், சோம்பல் முதலியவற்றை அற்ற தீரர். ஆகவே, அனைவராலும் பூஜிக்கப்படுகிறார். அவருடைய சொல்லும் செய்கையும் காமத்தினாலோ, அல்லது லோபத்தினாலோ வேறுபடாமல் ஒரே நிலையில் இருக்கும். அதனால், ஜனங்களால் எப்பொழுதும் பூஜிக்கப்படுகிறார்.

நாரதர் அத்யாத்ம வித்தையில் சிறந்தவர். சக்தியை உடையவர். பொறுமையும் உடையவர். இந்திரியங்களை வென்றவர். ஸத்யஸந்தர். நேர்மையானவர். தேஜஸினாலும், புகழினாலும், புத்தியினாலும், விவேகத்தினாலும், பணிவினாலும், தபஸினாலும், ஜன்மத்தினாலும் பெரியவர். ஆகையால், அனைவராலும் பூஜிக்கப்படுகிறார்.

நாரதர், நன்னடத்தை உடையவர். பவித்ரமானவர். பொறாமை அற்றவர். பழகுவதற்கு இனிமையானவர். இனிமையான பேச்சை உடையவர். மங்களகரமான காரியங்களை எப்பொழுதும் செய்பவர். பாப சம்பந்தமற்றவர். மற்றவர்கள் துன்பப்படும்போது, தன்னுடைய சந்தோஷத்தையும் விட்டு, அவர்களுக்காக வருந்துபவர். எனவே, அனைவராலும் பூஜிக்கப்படுகிறார்.

நாரதர் வேதங்களின் பொருளை உணர்ந்தவர். சகிப்புத்தன்மை உடையவர். யாராலும் அவமானப்படுத்தப்படாதவர். எல்லோரையும் சமமாக பாவிப்பதால், அவருக்கு விரோதியும் இல்லை, ப்ரியமானவனும் இல்லை. மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பவர். ஆகையால் அனைவராலும் பூஜிக்கப்படுகிறார்.

நாரதர் பல ஸ்ருதிகளையும், சாஸ்த்ரங்களையும் கற்ற பண்டிதர். கள்ளத்தன்மை, துன்பம், கோபம், கருமித்தனம் முதலியவை அற்றவர். செல்வத்தினாலும், பொருளாலும், காமத்தினாலும், மனம் கலங்காதவர். தோஷங்களற்றவர். திடபக்தி உடையவர். பற்றற்றவர். ஆனால், பற்றுள்ளவர் போல் காணப்படுபவர். சம்சயமற்றவர். ஆகையால், எல்லோராலும் போற்றப்படுகிறார்.

நாரதர் எப்பொழுதும் சமாதி அவஸ்தையில் இருப்பவர். உத்தமமான யோகீ. பகவானை உண்மையாக அறிந்தவர். யாரையும் குறை கூறமாட்டார். காலத்தை வீணாக்காமல் எப்பொழுதும் பகவன் நாமகீர்த்தனம் செய்பவர். அதைப் போதும் என எண்ணாதவர். சுகம், துக்கம் லாபம், நஷ்டம், முதலியன ஏற்படும்பொழுது, மாற்றம் இல்லாமல் ஒரே ஸ்திதியில் இருப்பவர். இவ்வாறு சர்வகுண சம்பன்னனாக இருப்பதாலேயே அனைவராலும் பூஜிக்கப்படுகிறார்'' என்று ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா கூறினார்.

இவ்வாறு ஸ்ரீ க்ருஷ்ணர் உக்ரசேன மஹாராஜாவிற்கு, நாரதருடைய பெருமைகளை சொன்னதை ஸ்ரீ பீஷ்மர் எடுத்துரைத்தார்.

**– மஹாபாரதம். ஶாந்திபர்வம்**

**– பாலாஜி**

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhuramurali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamiji's lectures / essays
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas and more.

# பகவானின் லீலை

ரயில்வேயில் டி.டி.ஆர் பணியில் இருந்த எளியேனுக்கு பகவான் ஸ்ரீ யோகிராம்சுரத்குமார் அவர்களின் அருளினால் ஏற்பட்ட அனுபவத்தை கீழே விவரிக்கின்றேன்.

காலை 6 மணிக்கு ரயிலில் விழுப்புரம் வந்து இறங்கியாகி விட்டது. மாலை 5¼ மணிக்குத்தான் மீண்டும் திருச்சிக்கு ராமேஸ்வரம் செல்லும் வண்டியில் பணி. சுமார் பதினோரு மணிநேரம் உள்ளது. திருவண்ணாமலை சென்று, பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களை சன்னதி தெருவில் தரிசித்துவிட்டு, மாலை நான்கு மணிக்குள் பஸ்ஸில் விழுப்புரம் வந்துவிடலாம். அதன்பின் ஒன்றேகால் மணிநேரம் உள்ளது. இந்த சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்று அதை செயலாக்கினேன்.

காலை பத்து மணிக்கு பகவான் யோகிராம் சுரத்குமார் அவர்களின் சன்னதியை அடைந்துவிட்டேன். வழக்கம் போல் பகவானுக்கு, பாதபூஜை. பாதசேவனம் செய்துமுடித்து வந்தவுடன் எதிரில் அமர்ந்தேன்.

ஆங்கிலத்தில் அச்சாகிய ஒரு மாத சஞ்சிகையை, எளியனிடம் கொடுத்து, ''இந்தப் பத்திரிகை ஹரே க்ருஷ்ணா இயக்கத்தாரால் ப்ரசுரிக்கப்பட்டதாகும். ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபுவால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம். நாமஸ்மரணை, நாமகீர்த்தனம் இதுவே போதும். கலியுகத்தில், ஸ்ரீ ஹரியின் கருணையையும், அருளையும் எளிதில் பெற இது ஒன்றே போதும்'' என்று விளக்கம்கூறி, முதலில் ஒரு பக்கத்தைப் புரட்டிப்படிக்கும்படி பகவான் ஆணையிட்டார்கள். ஆங்கிலத்தில் இருந்தபடியால் நிதானமாகவும், உச்சரிப்பு பிசகாமலும் படித்தேன். அவ்வப்போது பகவான், சில இடங்களில் நிறுத்தச் சொல்லி விளக்கம் அளித்தார்கள். அதன் சாரத்தை தமிழில் குறிப்பிடுகிறேன்.

''பகவான், எத்தனையோகோடி ஜீவராசிகளைப் படைத்து, காத்து, அழித்து, மீண்டும் படைத்தும் வருகிறான். அவன் படைப்பை குறை கூற நமக்கு என்ன தகுதி உள்ளது. என்ன யோக்யதை உள்ளது. நாம் யார்? அதை விமர்சிக்க! நமக்கு இட்ட வழியில் நாம் செல்ல வேண்டியதுதானே முறை!

புலி கொடூரமான பிராணி; ஆட்களையும், பசு, மான் போன்றவைகளையும் அடித்துக் கொல்கிறது என்ற குற்றச்சாட்டை சுமத்தி, அதைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றாதே! மான்கூட்டம் மிகுமானால் காட்டிலுள்ள கொடி, தழைகளைத் தின்றுவிட்டு அதுவும் போதாமல், மரத்தின் பட்டையையும் தின்றுவிடும். மரங்கள் பட்டுப் போய், காடே பாலைவனமாக மாறி, பறவைகள், மிருகங்களுக்கு தங்க இடமில்லாமல் போய்விடும். மரமில்லா விட்டால் மழை வருமா? பயிர்கள்தான் விளையுமா? பஞ்சம் பட்டினிதானே மிஞ்சும்? இப்போது சொல். புலி படைக்கப்பட்டது சரியா? தவறா? யாரையும், எவரையும் குறைகூறாதே. நீ அனைவரிடமும் அன்பாக நடந்துகொள். உன்னால் முடிந்த உதவிகளைச் செய்'' என்று விளக்கம் அளித்தார்கள்.

இதைப்படித்து முடித்தபின், வேறு ஒரு பக்கத்தை கொடுத்துப் படிக்கச் சொன்னார்கள். அதன் சாரம், நாம மஹிமையாகும். நாம பஜனையின் முக்கியத்துவம், நாம மஹிமை, அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டு இருந்தது. ஒரு சம்பவமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ரயில்வேயில் Gaurd ஆக பணி செய்தவர் அகர்வால். ஆக்ரா முதல் மதுரா வரை செல்லும் பாஸஞ்சர் வண்டியில் பணி. பகல் பத்து மணிக்கு மதுரா வந்து இறங்கியாகிவிட்டது. இனி, மாலை 6 மணிக்குத்தான் ஆக்ரா செல்லவேண்டும். பஸ்ஸில் ப்ருந்தாவனம் செல்லலாம். கண்ணன் விளையாடிய லீலைகள் புரிந்த இடம் அது. அங்கு பக்தர்கள் கண்ணன் புகழ்பாடி பஜனை செய்வார்கள். ஆத்மார்த்தமாக உலகை மறந்து, ஆழ்ந்த உணர்வுகளுடன் ஈடுபட ஆசை. ப்ருந்தாவனம் சென்று ஒரு பஜனை கோஷ்டியில், தானும் ஒருவராக இணைந்துவிட்டார். அவர்களுடன் சேர்ந்து பாடினார். தான் பாட அவர்களும் இவர் பாட்டை வாங்கிப்பாடினர். நேரம் போவது தெரியவில்லை. எந்தச் சிந்தனையும் இல்லை. வேறு உணர்வு இல்லை. அந்த மாயக்கண்ணனின் லீலைகளை அனுபவித்து உள்ளம் உருக அனைவரும் ஒன்றாக கண்ணனின் ப்ரேமையில் லயித்துவிட்டனர். அன்று அகர்வாலுக்கு ஏற்பட்ட அனுபவம் புதிதாக இருந்தது. தான் வேறு, கண்ணன் வேறாகத் தோன்றவில்லை.

''எனக்கு நீதான் யாவும். நீ ஒருவன் மட்டும் போதும். என்னைக் கைவிடாதே. கண்ணா சரணாகதம். உன் திருவடிகளில்

சரணம் அடைந்தேன்'' என்றார். பஜனையும் முடிந்தது. சுயநினைவுக்கு அகர்வால் வந்தார். கை கடிகாரத்தைப் பார்த்தார். இரவு 7 மணி ஆகிவிட்டது. அப்படியானால், தான் பணியில் செல்லவேண்டிய ரயில்வண்டி மதுராவிலிருந்து மாலை 6 மணிக்கே புறப்பட்டிருக்கும். தான் போகாததால், வேறு Guard ஒருவரை பணியில் அமர்த்தி போகச் செய்திருப்பார்கள். Dutyக்கு வராததால் ஒழுங்கு நடவடிக்கைதானே எடுப்பார்கள். எடுக்கட்டுமே! இன்று பஜனையில் ஈடுபட்டபோது புதிதாக ஒரு அனுபவம் ஏற்பட்டுள்ளதே! ''என் மீது பாரத்தைப் போடு: உன் சுமையை நான் ஏற்றுக்கொள்கிறேன்'' என்ற பகவானின் வாக்கின்படி, மதுரா ஸ்டேஷனுக்கு அகர்வால் வந்தார்.

ஒரு எக்ஸ்பிரஸ் ரயில்வண்டி ஆக்ரா செல்லத் தயாராக இருந்தது. அதில் ஏறி அமர்ந்து, ஆக்ரா வந்து சேர்ந்து கார்டுகளின் ரெஸ்டு ரூமுக்குப் போய், தனக்கு பதிலாக யார் வந்தார்கள்? தான் வராததால் வந்த Guard என்ன ரிப்போர்ட் ட்ரயின் கண்ட்ரோலருக்கு தெரிவித்துள்ளார் என அங்கு உள்ளோரை வினவினார்.

அங்கிருந்த ஒரு Guard, ''என்ன அகர்வால்? ஒரு மணி நேரத்திற்கு முன்னர்தானே நீங்கள் வந்து தகவல் கொடுத்துவிட்டு கையெழுத்திட்டுச் சென்றீர்கள். எங்களை வியப்பில் ஆழ்த்த இவ்வாறு கேட்கிறீர்களா?'' என்றார். ''அகர்வால், நீ Dutyயில் உடன் எடுத்துச்செல்ல வேண்டிய முதல்உதவி சிகிச்சைப் பெட்டியில் உன் பெயர் பதிக்கப்பட்டது. அதை கட்டிலில் கீழ் வைத்ததை மறந்து விட்டாயா? ரிப்போர்ட்டில் உள்ளது உன் கையெழுத்து தானே?'' என்று மற்றவர்களும் வினவினார்கள்.

அகர்வால் அவசரமாக முதலுதவிப்பெட்டியை அவசரமாக பிரித்துப்பார்த்தார். தன்னுடையதுதான் என்று ஒப்புக்கொண்டார். ரிப்போர்ட்டில் உள்ளதும் தன் கையெழுத்துதான் என்று ஒப்புக் கொண்டார். ஆக்ரா வந்துசேர 18 நிமிடம் தாமதம். ஓட்டுனரிடமும் அதன் நகலைக் கொடுத்து கையெழுத்துப்பெற்ற ரிப்போர்ட் உடைகளுடன் பேடில் கட்டிலில் இருப்பதைப் பார்த்தார். அவருக்கு புரிந்து விட்டது, பகவானே தன் உருவில் வந்திருக்கிறார் என்று.

''அப்படியானால், கண்ணா! இது உன் லீலையா? இந்த அகர்வாலின்மீது இவ்வளவு கருணையா! பெரியதாக நான் என்ன

செய்துவிட்டேன். உன் நாமஸ்மரணையில் இருந்தேன். உலகை மறந்து உன் நாமத்தைப் பாடினேன். அவ்வளவுதான். நீயோ தயாளு. அன்று சாந்தாசக்குபாயாக வந்து ஒரு மூட்டை கோதுமைமாவை அரைத்தாயே! இந்த எளியேன் மீதும் அந்த கருணையை வைத்திருக்கிறாயே!'' என்று பகவான் க்ருஷ்ணனின் லீலையை நினைத்து, கண்ணீர் மல்கினார். மற்ற ரயில்வே சிப்பந்திகளும் நடந்தவற்றை அறிந்து சிலையானார்கள்.

இந்த சம்பவத்தை படித்து முடித்த பிறகு, பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்கள், சாந்தா சக்குபாய், ஞானேஸ்வரர், புரந்தரதாஸர் முதலிய மஹான்களின் வாழ்க்கை சம்பவங்களை எளியேனுக்கு விளக்கிச் சொன்னார். நேரம் போவது தெரியவில்லை என்ற பாடல், முழுவதும் சரியே! நான் என்னை மறந்தேன்.

பகவானிடம், ''அகர்வாலுக்கு ஏற்பட்ட பாக்கியம் என்னே! இனியும் இந்த மாதிரி நிகழுமா?'' என்ற கேள்வியை கேட்டேன். ''ஏன் நடக்காது? Surrender, Total surrender, Faith, Immense faith, Absolute faith, இதுதான் basic" என்று கூறினார்.

மதியம் யோகியாரும், உணவு எடுத்துக்கொள்ளவில்லை. நானும் உணவு எடுத்துக்கொள்ளவில்லை. தண்ணீர்கூட குடிக்கவில்லை. ''இப்பொழுது நேரம் என்ன?'' என்று பகவான் வினவ, மாலை 5 மணி என்றேன். ''அப்பன்! உனக்கு விழுப்புரத்திலிருந்து ராமேஸ்வரம் செல்லும் வண்டிக்குதான், Dutyல் போக வேண்டும். அந்த வண்டி விழுப்புரத்திற்கு எத்தனை மணிக்கு வரும்?'' என்று பகவான் கேட்டார். நான், 5 மணிக்கு வந்து 5¼க்கு செல்லும் என்றேன்.

''அப்படியானால், இன்று உன்னால் அதைப் பிடிக்க முடியாதே'' என்றார் பகவான். ''ஆம். நான் ரயில்வே மருத்துவரிடம் உடல் நலக்குறைவுக்கான சான்றிதழ் பெற்று அதை எனது மேலாளரிடம் கொடுத்துவிடுவேன். ஆனால், பகவானே! எனக்கு இந்த நாள் முக்கியமாக இருக்கும் என்று என் ஆழ்மனம் கூறுகிறது. அகர்வால் அனுபவத்தை எளியேனைக்கொண்டு படிக்க வைத்தீர்கள். உனக்கும் உறுதிப்பாடு வேண்டும் என்பதற்காக இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். யாவும் நீங்கள் அறிவீர்கள். எங்கும் நிறைந்தவர்கள்

நீங்கள். யாவும் உங்களால் முடியும். எளியேனுக்கு தாங்கள் வைக்கும் பரீட்சை இது. தங்களின் பாதாரவிந்தமே எனக்கு கதி. எளியேனுக்கு ஏது துயரம்!'' என்று பகவானை வணங்கினேன்.

மரக்கதவை திறந்துகொண்டு, கம்பி கேட்டையும் திறந்து வெளியே வந்து, தேரடி வந்து, தெரு திரும்பும்வரை கைகளை உயர்த்தி, பகவான் ஆசி புரிந்தார்கள். 5:20க்கு பஸ்ஸைப் பிடித்து, 6:45 மணிக்கு விழுப்புரம் வந்து சேர்ந்தேன்.

டி.டி.ஆர்களின் ரெஸ்ட் ரூமில், எனது Inspector மீனாட்சி சுந்தரம் இருப்பதைக் கண்டேன். டாக்டரிடம், போக முடியாதபடி உடனடியாக வண்டியை தவறவிட்டதற்கு, முகாந்திரம் எழுதிக் கொடுக்கச் சொல்லி விடுவாரா? பகவான் யோகிராமா என்னைக் காப்பாற்று, என்றேன். ஆனால், Inspector கூறுவதைக்கேட்டு நான் மிகவும் அதிர்ச்சியுற்றேன்.

''அப்பன், நீ தபோவனம், திருவண்ணாமலை, இங்கெல்லாம் போய் வருவதை நான் அறிவேன். ஏதோ சூழ்நிலையில் உன்னால் வரமுடியாததை அறிந்தேன். ராமேஸ்வரம் பாஸஞ்சரில், இரண்டு ரயில் பெட்டிகளையும், சேர்த்துபார்க்கும்படி டி.டி.ஆர் ரத்தின சாமியிடம் கூறி அனுப்பிவிட்டேன். உனது டயரியை எடு. அடுத்து வரும் நெல்லை எக்ஸ்பிரஸில் General Check செய்துகொண்டு திருச்சி போய் இறங்கு. நான் Guard வேனில் வந்து திருச்சியில் உன்னை சந்திக்கிறேன்'' என்று கூறி, எனது டயரியில் ஆர்டர் எழுதி கையெழுத்தும் போட்டுவிட்டார்.

மேலும் ''பண்ருட்டியிலிருந்து ஒரு பலாப்பழத்தை என் தம்பி அனுப்பியிருக்கிறான். அதையும் உன் லைன் பாக்ஸுடன் ஏற்றச் சொல்லி என்னுடைய ரெஸ்ட் ரூமுக்கு எடுத்து வந்துவிடு'' என்று மீனாட்சி சுந்தரம் கூறினார்.

சிறிது நேரத்தில் நெல்லை எக்ஸ்பிரஸும் வந்தது. சீருடையுடன் சோதனையில் ஈடுபட்டேன். வண்டியில் இருபது பேர் டிக்கட் இல்லாமல் பயணம் செய்ததை ஒப்புக்கொண்டனர். அதனால், அபராதமாக 500 ரூபாய் கட்டணமும், 300 ரூபாய் கட்டணமுமாக மொத்தம் 20 பேர்களுக்கும் ஒரே ரசீதாக ரூபாய் 16000த்திற்கு ரசீது

எழுதினேன். வண்டியும் பின்னர் திருச்சிக்கு இரவு 1 மணிக்கு வந்தது. பொன்மலையில் இராமேஸ்வரம் பாஸஞ்சர் நிற்பதைக் கண்டேன். அடுத்த 5 நிமிடங்களில் இராமேஸ்வரம் பேஸஞ்சர் திருச்சி ஜங்க்ஷனுக்கு எதிர் பிளாட்பாரத்தில் வந்தது. அந்த வண்டியிலிருந்து ரத்தினசாமி இறங்கி வந்தார். அப்பொழுது தான், பகவான் செய்த லீலை அறியமுடிந்தது.

மீனாட்சி சுந்தரமும், ரத்தினசாமியும், ''என்ன அப்பன், நெல்லை எக்ஸ்பிரஸில் வந்து இறங்குகிறாய்? உன் வண்டியை மிஸ் செய்துவிட்டாயா?'' என்றார்கள். நான் மீனாட்சிசுந்தரத்திடம், ''ஏன் சார்? நீங்கள்தானே Man 119 என்று எழுதி கையெழுத்துப் போட்டீர்கள்? ரத்தினசாமியை இரண்டு ரயில் பெட்டிகளையும் சேர்த்துப் பார்க்கும்படி அவர் டயரியிலும் ஆர்டர் போட்டதாகச் சொன்னீர்களே!'' என்று கூறினேன்.

''எங்கே! ரத்தினசாமி, உன் டயரியைக் கொடு'' என்றார். அவரும் டயரியைக் காண்பித்தார். நானும் என் டயரியைக் காண்பித்தேன். ''ஆமாம்! என் கையெழுத்துதான். ஆனால், நான் இரண்டு நாட்களாக லீவில் அல்லவா இருக்கிறேன்'' என்றார். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. 119ல் ரூ. 16000த்துக்கு ஒரே ரசீது அபராதத் தொகை போட்ட விஷயத்தைச் சொன்னேன். அதற்கு மீனாட்சி சுந்தரம், ''அப்பன்! உனக்கு உன் குருநாதர் க்ருபை செய்திருக்கிறார். நான் உன்னை அந்த வண்டியை மேன் செய்யச் சொன்னதால் அந்தக் கேஸ் பிடித்ததில் பெருமை தானாக எனக்கும் வருகிறது. நான் கையெழுத்துப் போட்டதாக ஒப்புக்கொள்கிறேன்'' என்றார் மிகவும் ஆச்சரியத்துடன். பிறகு என் ரசீது புத்தகத்திலும் அவர் கையெழுத்துப் போட்டார். தனது டயரியிலும் என்னுடைய ரசீது புத்தகத்தின் விவரங்களை குறித்துக்கொண்டார். தெய்வமில்லை என்று கூறும் ரத்தினசாமியும், தன் கீழ் வேலை பார்க்கும் நபர்களை கடுமையாக நடத்தும் மீனாட்சிசுந்தரமும் மனம் மாறினர்.

சற்று நேரத்தில், பாக்ஸ்பாய் என் பெட்டியுடன் பலாப் பழத்தையும் ட்ராலியையும் எடுத்துவந்தார். நான் மீனாட்சி சுந்தரத்திடம், ''இது உங்கள் பலாப்பழம்'' என்றேன். அவரோ பலாப்பழமா? ஏது பழம்?

என்றார். விழுப்புரத்தில், உங்கள் தம்பி, பண்ருட்டியிலிருந்து அனுப்பியதாக சொன்னீர்களே! என்னிடம் கொடுத்து கொண்டு வர சொன்னீர்களே! என்றேன். மீனாட்சி சுந்தரம் அதற்கு, ''எனக்கு தம்பியே கிடையாது. இது நான் உனக்கு செய்யப்போகும் உதவிக்காக உன் குருநாதர் பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்கள், எனக்கு கொடுத்த பரிசோ!'' என்றார். அனைவரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினோம்.

**- திரு. அப்பன் ஸ்ரீரங்கம்**

நன்றி : சரணாகதம் மற்றும் நவசக்தி விஜயம்

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

- மதுரமுரளிக்கான சந்தா தொகையை, ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்ற பெயரில் மட்டுமே M.O. or D.D. ஆக அனுப்ப வேண்டும்.

  உள் நாடு : வருட சந்தா ரூ. 60/- ஆயுள் சந்தா ரூ. 1000/-
  வெளி நாடு : வருட சந்தா ரூ. 300/-

- சந்தாவை காசோலையாக அனுப்ப வேண்டாம்.
- சந்தா எண், சந்தாதாரர் முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ளமாட்டாது.
- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் Address labelல் இரண்டாம் வரியில் உள்ளது.
- சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்பினால்தான் வரும் மாதத்தில் செயல்படுத்த முடியும்.
- மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

''**மதுரமுரளி**'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

# பிரார்த்தனை

—ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

சாதாரணமாக உலகத்தில் சந்தோஷமும் துக்கமும் காணக் கிடைக்கின்றது. ஒரு பக்கம், கல்யாணம், உத்ஸவங்கள், விளையாட்டுக்கள், பாட்டு, கூத்து, கேளிக்கை. மறுபக்கம் வியாதி, முதுமை, பண வீக்கம், வேலையின்மை, பொறாமை, போட்டி, சந்தேகம், சச்சரவுகள் இப்படியாக உள்ளது உலகம். இப்படி சம்ஸாரத்தில் உழலும்போது எவ்வளவோ விஷயங்கள். யார் இதிலிருந்து விடுபட விரும்புகிறார்களோ அவர்கள் தங்களை முழுவதுமாக ஸம்ஸார வாழ்க்கையிலிருந்து விடுபடுத்திக்கொண்டு தெய்வீக வாழ்க்கையில் ஈடுபடுத்திக்கொண்டு விடுகின்றனர்.

ஸம்ஸாரத்தில் தைர்யமாக பிரவேசிக்கும் ஜனங்களுக்கு யாருக்குத்தான் இது துக்கமுள்ளது என்று தெரியாது! பிறருக்கு வரும் மரணம், வியாதி, கஷ்டங்களை கண்கூடாக பார்க்கிறார்கள் அல்லவா? ஆகவே, அவர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் தனக்கும் எப்பொழுது வேண்டுமானாலும் வரும் என்று தெரியுமல்லவா? ஆகவே, அது தெரிந்துதானே அவன் ஸம்சார வாழ்க்கையில் ஈடுபடுகின்றான்! ஆகவே, தெய்வத்தைக் குறை கூறி ஒன்றும் பிரயோஜனமில்லை.

சிலர், ‘‘நாம் கடவுளை நம்பினால், கடவுளே நம் குடும்ப பொறுப்பை வகிப்பான் என்று கூறுகிறார்களே; ஆனால், நான் கஷ்டப்படுகின்றேனே!’’ என்று கேட்பார்கள். அவர்கள் பகவானையோ, குருவையோ தான் நம்புவதாகக் கூறிக்கொண்டு சோம்பேறிகளாக வாழ்வார்கள். அதாவது சினிமா, டீவி, பார்ட்டீ, ஊர் வம்பு என்று வாழ்ந்துவிட்டு கடவுள் தனக்கு அருள் புரியவில்லை என்று குறை கூறுவார்கள்.

பகவான் யாருடைய குடும்ப பாரத்தை வகிப்பான் தெரியுமா? யார் அவனுக்காகவே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு எதைப்பற்றியும் கவலை இல்லாமல் எப்பொழுதும் அவனுக்குத் தொண்டு செய்துகொண்டு, அவன் புகழைப்பாடி அவன் கதையை ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அவனையே

ஸ்மரித்துக்கொண்டு வாழ்கின்றார்களோ அவர்களுடைய எவ்வளவு பாரத்தையும் பகவான் தாங்கத் தயாராக இருக்கின்றான். சோம்பேறிகளாக வாழ்பவர்களின் பாரத்தை, தான் வகிப்பதாக ஒருக்காலும் யாருக்கும், எப்பொழுதும், எங்கும், பகவான் வாக்குக் கொடுக்கவில்லை. ஆகவே, ஸம்ஸாரத்தில் பிரவேசித்து அதைச் சரியாக நிர்வகிக்கத் தெரியாமலும் பிராரப்த வசத்தாலும் அநேக இடையூறுகளை அடையும் ஜனங்கள் இறைவனை பிரார்த்திக்கின்றார்கள். பிரார்த்தனைகளுக்கு பலன் உண்டு. யார், யார் எதை யாசித்துக்கொண்டு பிரார்த்திக்கின்றார்களோ, அதை அதை பூர்த்தி செய்து வைக்கின்றான். நம்முடைய நம்பிக்கைக்கு தகுந்த அளவுக்கு பலன் ஏற்படுகின்றது.

எல்லாவற்றிற்கும் மூன்று நிலை உண்டு. ஒருவன், புலால் உண்பதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டிருந்தான். சங்கல் பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அலட்சியம் செய்துவிட்டு வேறு ஆகாரங்கள் கிடைக்கும்பொழுதும் புலாலை சாப்பிடுபவன் அதமன். ஒரு பிரதேசத்தில் புலாலைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம். ஆகாரம் இல்லாவிட்டால் உயிர் நிற்காது என்று நிலைமை. அங்கு, அவன் உயிரைக் காப்பாற்றி கொள்ளும் அளவுக்கு புலால் ஆகாரத்தை எடுத்துக் கொண்டால் மத்யமன். உயிர் போனாலும் பரவாயில்லை ஒருக்காலும் புலால் உண்ண மாட்டேன் என்று உயிரையும் துச்சமாக நினைப்பவன் உத்தமன்.

அதுபோல ஒருவன் நினைவு தெரிந்த முதல் காசிக்கு போகமாட்டேனா, கங்கா ஸ்நானம் பண்ணமாட்டேனா என்று தவித்து, உருகி, காசி யாத்திரையும் கங்கா ஸ்நானத்தையும் செய்கின்றானோ அவனுக்கு உத்தம பலன். யாரோ சொன்னார்கள் என்று கிளம்பி காசிக்குச் சென்று கங்கா ஸ்நானத்தை சிரத்தையுடன் செய்பவனுக்கு மத்யம பலன். எதிலும் நம்பிக்கை இல்லாமல் வேறு யாருடைய நிர்பந்தத்தின் பேரிலோ காசிக்கே சென்று, கங்கையில் ஒரு முழுக்கு போடுபவனுக்கு அல்ப பலன் ஏற்படும். ஆகவே, எல்லா கார்யங்களிலும் தாபமும் சிரத்தையும் அவசியம்.

அதுபோல, நாம் பல துக்கங்களுக்கு நடுவில், துக்கத்தின் கொடுமை தாங்காமல் பல பிரார்த்தனைகளை செய்துகொண்டு விடுவோம். அதை நிறைவேற்றுவதில் நமக்கு உள்ள அக்கறைதான் விசித்திரமானது.

குழந்தை இல்லாத தம்பதிகள் குழந்தைக்காக மிகவும் ஏங்கி தவிப்பார்கள். அந்த தம்பதிகளை ஊரில் எல்லோரும் மலடு என்று பரிகசிப்பார்கள். சுபகார்யங்களிலிருந்து ஒதுக்கி வைத்துவிடுவார்கள். யார் வீட்டில் குழந்தை பிறந்து தொட்டில் போட்டாலும் அழைக்க மாட்டார்கள். தப்பித் தவறி, குழந்தையைப் பார்க்க வந்தால் கண்பட்டுவிடும் என்று திருஷ்டி கழிப்பார்கள். இப்படியெல்லாம் உலகம் இருக்கும்பொழுது அவர்களுடைய மனம் வேதனையினால் தவிக்கும்.

எனக்கு ஒரு குழந்தை பிறந்தால் நேந்திரம்பழம் துலாபாரம் தருகிறேன் என்று குருவாயூரப்பனிடம் பிரார்த்தித்து அழுவார்கள். குழந்தை பிறக்கும். பிறந்த உடனே சிறிது காலத்தில் பிரார்த்தனையின் ஞாபகம் போய்விடும். ஆபீஸில் லீவு இல்லை, கையில் காசு இல்லை என்று ஊட்டிக்கும் கொடைக்கானலுக்கும், கல்யாணங்களுக்கும் போய் வருவார்கள். குருவாயூருக்குப் போகவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

பெண் குழந்தையாக இருந்தால் கல்யாணமும் பண்ணி வைத்து விடுவார்கள். புக்ககத்தில் அந்தப் பெண்ணுக்கு சிரமங்கள் ஏற்பட்டால், ஒரே குழந்தை செல்லமாக வளர்த்தோமே, இப்படி கஷ்டப்படுகின்றதே என்று துக்கம் மேலோங்கி, 'குருவாயூர் பிரார்த்தனை' ஞாபகத்துக்கு வந்து ஓடுவார்கள். அப்படி சென்றும், அங்கு சென்ற உடனே வசதியான லாட்ஜாகத் தேடி, நல்ல சாப்பாட்டிற்கு வழி செய்து கொண்டு, கையில் பணம் இருக்கும் திமிரில் துலாபாரத்துக்குப் பணமும் கட்டிவிட்டு பிரார்த்தனையை நிறைவேற்றி விட்டதாக வந்து விடுவார்கள். மீதி விஷயத்திற்கு இவர்கள் தரும் முக்யத்துவம், பகவத் தர்சனத்தில் இருக்காது.

பின்னே எப்படி பிரார்த்தனையை நிறைவேற்ற வேண்டும்? குழந்தை பிறந்த உடன், எடுத்துக்கொண்டு ஓடி குருவாயூரப்பன் சன்னதியில் போட்டு, ''என்னே உன் கருணை! ஊரில் எப்படி என்னைப் பழித்தார்கள். பிரபோ! எப்படி என்னை ரட்சித்துள்ளாய்! இது உன் குழந்தை, என்றும் உன் கருணை எனக்கு வேண்டும்'' என்று கண்ணீர் மல்க நின்றால் அது ஆயிரம் துலாபாரத்துக்கு சமானமாகும் அல்லவா!

# மாலே மணிவண்ணா - 29

– மஹாவித்துவான், மயிலம் **வே. சிவசுப்பிரமணியன்**

பிறப்பு என்பதைச் 'சிறை' என்று சொல்வர் பெரியோர். 'பிறவிச் சிறை' என்பதே ஆன்றோர் வாக்கு. சிறைக்குள் இருப்பவன் தன் விருப்பப்படி வெளியில் வருதல் இயலாது. குறித்த காலம் முடிந்து வெளியில் உள்ள அதிகாரிகள் விடுதலை செய்தால்தான் வருதல் இயலும். இத்தகைய பிறவிச் சிறையில் இருக்கிறவர்கள் நாம் வினை வழியாகப் பிறவி எடுக்கின்றோம். 'ப்ராரப்த கன்மம்' என்று சொல்கிற அனுபவிக்க எடுத்துக் கொண்ட வினை தீர்ந்தாலன்றி நாம் பிறவியிலிருந்து வெளியேற இயலாது. சிறைக்குள் இருப்பவனுக்கு வெளியில் பூட்டு இருக்கும். வெளியில் இருப்பவர்கள் திறந்தால் தான் வெளியேற முடியும்.

வீட்டில் இருப்பவனும் கதவைச் சாத்தி உள்ளே பூட்டிக் கொண்டு உறங்குகிறான். அவனுக்குப் பூட்டு உள்ளே இருக்கிறது. சாவி அவன் கையில் உள்ளது. எப்பொழுது வேண்டுமானாலும் அவன் திறந்துகொண்டு வெளியில் வரலாம். வினை வழியாகப் பிறவி எடுப்பவர்கள் வினை தீர்த்தால் அன்றி பிறவிச் சிறையிலிருந்து வெளியேற இயலாது சுதந்தரமற்றவர் ஆவர்.

தன்னுடைய நினைவினால் (சங்கற்பத்தினால்) அவதாரம் எடுக்கிற பகவான் தன் விருப்படி எப்பொழுது வேண்டுமானாலும் அவதாரத் தோற்றத்தை முடித்துக் கொள்கிற சுதந்தரமுடையவன். இறைவனது எட்டுக் குணங்களில் தன் வயத்தனாதல் (சுதந்தர முடையவன்) என்பதும் ஒன்று.

விஷ்ணு சஹஸ்ரநாமத்தில், 31வது திருநாமம் 'ஸம்பவ:' என்பது. தன் விருப்படி சிறப்புடன் தோன்றுபவர். எதற்கும் அறியவாராமல் இருக்கின்ற பகவான் எல்லோருக்கும் அனுபவிக்கும்படி அழகிய வடிவுடன் தோன்றுகிறார். ''ஸம்**ப**வாமி யுகே யுகே'' என்று அல்லோரை அழிக்கவும் நல்லோரைக் காக்கவும், தர்மத்தை நிலைநிறுத்தவும், கருவரையில் தங்குதல் போன்ற வாசனைகள் இல்லாமல், அழுகையும் உளைச்சலும் இன்றி தன் இச்சைப்படி

தோன்றுகிறான் பகவான். கீதையின் ஸ்லோகக் கருத்தை அழகுத் தமிழில் கம்பர்,

*''அறம் தலை நிறுத்தி வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்*
*திறம் தெரிந்து, உலகம் பூணச் செந்நெறி செலுத்தி, தீயோர்*
*இறந்து உக நூறி, தக்கோர் இடர் துடைத்து, ஏக, ஈண்டுப்*
*பிறந்தனன்–தன் பொன்பாதம் ஏத்துவார் பிறப்பு அறுப்பான்.''*

கம்ப – 5885

என்று கூறினார்.

இங்கு 'பிறந்தனன்' என்றாலும், தன் சங்கல்பத்தினால், தன் விருப்பப்படி நிகழ்வதால், அது நம் பிறவிபோல் ஆகாது என்பதையும் உணர்தல் வேண்டும். இறைத்தன்மையை தானே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிற பல வடிவங்கள் கொண்டவர் என்று தன்னை கண்ணன் கீதையில் பத்தாம் அத்தியாயத்தில் விளக்கியது கொண்டு, அவன் 'பல் பிறவிப் பெருமான்' என்பதும் பொருந்தும்.

சஹஸ்ரநாமம் 986வது மந்திரம் ''ஸ்வயம் ஜாத'' என்பதாகும். 'தானே தோன்றியவர்' என்பதும் மேற்சொல்லிய கருத்தை விளக்கும் – வசுதேவரும் தேவகியும், கண்ணன் தோன்றக் காரணமானார்களே என்ற கேள்வி எழும். அவர்கள் கண்ணனைப் பிறப்பித்தவர்கள் தானே என்ற நினைவு தோன்றும். அவர்கள் இருவரும் செய்த தபோ பலத்தால் தனக்குப் பெற்றோர்கள் என்ற பெருமையை அவர்களுக்கு அளிக்கவே அவர்களிடம் பிறந்தது போலத் தோன்றினாரே அல்லாமல் நம் பிறவிபோல் தோன்றினார் இல்லை. இக்கருத்தை 'சுக பிரம்மர்' 'பாகவதத்தில்,

*''தேவக்யாம் தேவரூபிண்யாம் விஷ்ணு: ஸர்வகுஹாஶய:*
*ஆவிராஸீத் யதா ப்ராச்யாம் திஶீந்துரிவ புஷ்கல:*

(ஸ்ரீமத் பாகவதம் 10–3–8)

என்று கூறினார்.

கிழக்கில் பூர்ண சந்திரன் உதிப்பதுபோல் கிருஷ்ணன் தோன்றினார் என்று சுகர் கூறியதன் கருத்து, பகவானுக்கு மறைவில்

இருப்பது வழக்கம். தேவகியிடம் குடியிருந்தார், தானே வெளி வந்தார். (தேவகி பெறவில்லை) கிழக்குத் திசைக்கும் சந்திரனுக்கும் எவ்வளவு ஒட்டுதல் உண்டோ அவ்வளவுதான் தேவகிக்கும் கண்ணனுக்கும் என்று பொருள். தேவகியின் கருவறையில் நுழையவும் தங்கவும் அங்கிருந்து வெளியேறவும் பகவானுக்கு அவ்வளவு சுதந்திரம். பிறரது வேண்டுதலை எதிர்பாராமல் தானே வருபவர் பகவான் என்பதை மேலும் அற்புதமாக சுகர் பாகவதம் 10 – 2 – 16, 18 சுலோகங்களில் விவரித்துள்ளார்.

ஸ்ரீ விஷ்ணுவின் திரு அவதாரங்களாகிய இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் முதலியவை 'பிறவாது பிறந்த' அவதாரங்களே. இக்கருத்தை, ''ஒரு வயிற்றில் பிறவாது பிறந்தருளி உலகு ஒடுக்கும் திருவயிற்றிற்று ஒரு குழவி திருநாமம் பரவுதுமே'' என்று கலிங்கத்துப்பரணி கடவுள் வாழ்த்தில் திருமால் துதியில் கூறுகிறது.

***''மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப் பிறவி பிறந்த***
***தனியன் பிறப்பிலி தன்னை''*** (திருவாய்மொழி–3:5:6)

என்பதில் நம்மாழ்வார், ''மாயப்பிறவி பிறந்த '' , ''பிறப்பிலா'' என்று கூறுகிறார். ''மீனவதார முதலாயின வினை இன்றி இச்சை, ஆன அது ஆர் அறிவார் அவரே முத்தர்'' (அழகரந்தாதி–66) என்று பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறியதும் நினைக்கத்தகும்.

***''குறிபடுதிங்கள் ஒருபதும் புகாது***
***பொன்பெயர் உடையோன் தன்பெயர் கெடுப்ப***
***தூணம் பயந்த மாணமர் குழவி''*** (கல்லாடம் 5)

என நரசிம்மாவதாரம் பிறவாது பிறந்தமையைக் கல்லாடர் கூறியதும் கொண்டு காண்க.

**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** (5 வரிகள் / 40 வார்த்தைகள்)

¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', குருஜீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,

24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

✆ 044-23710110

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 29

ஜன சந்தடியற்று அமைந்துள்ள கங்கைக் கரையின் ஒரு பகுதியில் ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் நடைபெறுகிறது. கதை சொல்பவர் ஒரு மஹாத்மா. ஒரு கோவணாண்டியாக உள்ளவர். கதை கேட்பவர் சாக்ஷாத் கங்கா மாதா. கதை சொல்லும் மஹாத்மா கங்கா மாதாவையே லக்ஷியமாக வைத்து உரத்த குரலில் பாகவதம் சொல்லிக்கொண்டு இருக்கிறார். கங்கையும் கலகலசென்று ஓடிக் கொண்டே கேட்கிறாள். வேறு யாரும் அங்கு கிடையாது, யாருக்கும் அழைப்பும் கிடையாது.

ஆனால், வண்டு எந்த அழைப்பை எதிர்பார்க்கிறது? எங்கெல்லாம் புஷ்பம் மலருகிறதோ அங்கே அது அழையாமலே சென்றுவிடுகிறதல்லவா? புஷ்பத்தின் நறுமணத்தை காற்று திக்கெல்லாம் பரப்புகிறதே அதையே வண்டு அழைப்பாக ஏற்றுக்கொள்கிறது. அதேபோல், ஸ்ரீமத் பாகவத கதையிலும் அப்படிப்பட்ட திவ்ய ஆகர்ஷணம் உள்ளது. கதையின் ஸ்வர அலைகள் ஆகாசத்தில் உள்ள ஒவ்வொரு அணுக்களிலும் வ்யாபித்து எங்கோ தூரத்தில் த்யானத்தில் ஆழ்ந்திருந்த ஒரு பரமஹம்ஸ மஹாத்மாவை சென்று ஸ்பர்ஸம் செய்தது. அவர் தனது த்யானம் கலைந்து இந்த ஓசையைத்தேடி மெதுவாக ப்ரவசனம் நடக்கும் இடத்துக்கு இரண்டாவது கேட்கும் ஆளாக வந்தடைந்தார்.

மூன்றாவது ஆளாக அங்கு நிச்சயமாக நந்தநந்தனான ஸ்ரீ க்ருஷ்ணன், கண்ணுக்கு புலப்படாமல் அமர்ந்திருந்தான். ''மத் பக்தா: யத்ர காயந்தி தத்ர திஷ்டாமி நாரத'' (நாரதா! என் பக்தன் எங்கெல்லாம் என் குணகானம் செய்கிறேனோ அங்கு சென்று நான் அமர்ந்து விடுகிறேன்) என்று க்ருஷ்ணனே சொல்லியிருக்கிறானே! அவனைக் கருத்தில்கொண்டு பரமஹம்ஸ மஹாத்மா கதை கூறுபவரிடம், ''யாருடைய கதை நடக்கிறதோ அவருக்கு நைவேத்யம் வைக்க வேண்டாமா? அவருக்கு வெண்ணையும் பால்பாயசமும் மிகவும் பிடிக்குமே!'' என்றார்.

ஆச்சர்யமாக அந்த இடத்தில் அப்போது அங்கு ஒரு வயதான பெண்மணி வெள்ளை ஆடை உடுத்திக்கொண்டு வந்தாள். அவள் வெண்ணையும் பால் பாயசமும் கொணர்ந்து இருந்தாள். அதை க்ருஷ்ணனுக்கு நைவேத்யம் செய்தார்கள். உடனே அந்த பெண்மணி அங்கிருந்து நகர்ந்துவிட்டாள். அன்று கதை முடிந்ததும் இரண்டு மஹாத்மாக்களும் அந்த ப்ரஸாதத்தை உண்டனர். அந்த உணவின் அசாதாணமான சுவையும் மணமும் அவர்களை அதிசயிக்கச் செய்தது. அதற்குப்பிறகு ஏழுநாட்கள் அவர்களுக்கு பசி என்னும் உணர்வே ஏற்படவில்லை. ஒரு திவ்ய ஆனந்தம் அவர்களைச் சூழ்ந்துகொண்டது. இரண்டு மஹாத்மாக்களும், வெண்ணையும், பால்சோறும் கொண்டு வந்தது கங்கா மாதாதான், வேறு யாருமில்லை என்று உணர்ந்துகொண்டனர்.

கங்காமாதாவிடம் இத்தனை ஈடுபாடுகொண்டு அவளுக்கு பாகவதம் ப்ரவசனம் செய்யும் இந்த மஹாத்மா யார்? ஜுனகட்டிலுள்ள கோதாபாவ் என்னும் இடத்தில் வாழ்ந்த ஸ்ரீமத் சேவாதாஸ் என்னும் மஹானின் சிஷ்யரான ஸ்ரீகோபால்தாஸ் தான் அவர். நிம்பார்க்க சம்ப்ரதாயத்தை சேர்ந்தவர் அந்த மஹான். கௌடீயப்ராஹ்மண குலத்தில் ஸ்ரீகோபால்தாஸ் பிறந்தார். பால பருவத்திலேயே ஸ்ரீசேவாதாஸ்ஸிடம் தீக்ஷை பெற்று அவருடன் யாத்திரைக்குப் புறப்பட்டார். யாத்திரை முடிந்ததும் வ்ரஜபூமியிலுள்ள தாம்யவனத்தில் வாழ ஆரம்பித்தார். பண்டிதர் ரகுவர்தாஸிடம் ஸ்ரீமத் பாகவத அத்யயனம் செய்தார்.

பாகவத பாராயணத்தில் ருசியுடன் அவரது வைராக்யமும் நாளொரு மேனியாக வளர்ந்தது. சில நாட்களிலேயே வெறும் கோவணதாரியாக, ஸ்ரீமத் பாகவத புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டு கங்கைக் கரைக்குச் சென்றுவிட்டார். கங்கைக் கரையிலேயே சஞ்சாரம் செய்துகொண்டு கங்காராணிக்கு பாகவதம் சொல்வார். சிலகாலம் கழித்து கங்காராணியின் ஆசீர்வாதம் பெற்று வ்ரஜத்துக்குத் திரும்பி வ்ருந்தாவனத்திலேயே வசிக்கலானார். மதுரகரி வ்ருத்தியால் அவருக்கு உணவு கிடைத்தது. எந்நேரமும் பாகவதமும் பகவானின் லீலா கதைகளை சொல்வதிலும் தனது வாழ்நாளைக் கழித்தார். அவரது பாகவத ப்ரவசனமும் ப்ருந்தாவனத்தில் அடிக்கடி நிகழ்த்தப்பட்டது.

மிகவும் ரஸமானதும், பக்தி நிரம்பியதுமான அவரது உபன்யாஸத்தற்கு அனேகர் வந்து ஆனந்தமடைவார்கள் அவர்களில் சுக சம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீ சரஸ மாதுரீஜியும் ஒருவர்.

ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு சேவை செய்வதிலும் ஸ்ரீ கோபால் தாஸுக்கு மிகவும் ஈடுபாடு உண்டு. உபன்யாஸத்திற்காக கிடைக்கும் அன்பளிப்புகளைக் கொண்டு அருகிலுள்ள பலராமனின் கோவிலில் வைஷ்ணவர்களுக்கு அன்னமளிப்பார். ஒருமுறை அவரது கனவில் பலராமன் தோன்றி வைஷ்ணவர்களுக்கு ஸேவை செய்யுமாறு உத்தரவு தந்ததால் அவரும் இந்த சேவையை அன்புடன் செய்து வந்தார். அவருக்கு ஸ்ரீ நிம்பார்க்க ஆசார்யரின் ஜன்ம உத்ஸவத்தைக் கொண்டாடும்படியான ப்ரேரணையும் ஏற்பட்டது. அதனால், அவர் உத்ஸவத்தை கொண்டாட ஆரம்பித்தார். அது இன்றுவரை நடைபெற்றுவருகிறது. வருடாவருடம் ஸ்ரீ நிம்பார்க்க ஆசார்யரின் ஜன்ம திதியில் புறப்பாடு, ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம், ராஸலீலை, நாமசங்கீர்த்தனம், ப்ராஹ்மண வைஷ்ணவ போஜனம் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு மிகவும் கோலாஹலமாக நடைபெறும். இதற்கான தனமும் தானாகவே வந்து குவியும். ஒவ்வொரு பைசாவையும் நல்லமுறையில் சேவைக்காக செலவு செய்துவிட்டு, தனது மண்கூஜாவுடன் கோவணாண்டியாக கங்கைக் கரைக்குச் சென்று விடுவார். ஸ்ரீ கோபால்தாஸ்ஜி, ஒரு தம்படிகூட வருங்காலத்துக்கென்று சேமித்துக்கொள்ளமாட்டார்.

ஒருமுறை, உத்ஸவத்திற்காக 200 ப்ராஹ்மணர்களை அழைத்து ஸ்ரீமத் பாகவத படனத்திற்கு ஏற்பாடு செய்தார். ஆனால், கோபால் தாஸ்பாபாவிற்கு கடுமையாக ஜுரம் கண்டு, பொருள் வசதிக்கு தகுந்த ஏற்பாடு செய்ய முடியாமல் போய்விட்டது. பாராயணம் ஆரம்பித்துவிட்டது. பாபாவுக்கு ப்ராஹ்மணர்களுக்கு எப்படி தக்ஷிணை தருவது என்ற கவலை ஏற்பட்டது. அன்று இரவு ராதாராணி அவரது கனவில் தோன்றி அவருக்கு தைரியமளித்தாள். அடுத்த நாளே எங்கிருந்தோ ஒரு தனிகர் அங்கு வந்து சேர்ந்தார். உத்ஸவத்தின் அனைத்து செலவுகளையும் தானே ஏற்பதாகக் கூறி மிகவும் விமர்சையாக நாம சங்கீர்த்தனம், ராஸலீலை, வைஷ்ணவ போஜனம் போன்றவைகளை நடத்தினார். ப்ராஹ்மணர்களுக்கு கடைசி நாளன்று

தங்கக் காசுகள் தந்து திருப்தி செய்வித்தார். இப்படி ஸ்ரீ கோபால்தாஸ்பாபா உத்ஸவத்தை அமோகமாக ராதா ராணியின் அருளால் நடத்தி முடித்ததால் அவருக்கு ''உத்ஸவீ'' என்ற பட்டப்பெயர் ஏற்பட்டு விட்டது. ஸ்ரீ கோபால்தாஸ்பாபா பக்த சரித்ரமும் மிகவும் அழகாக உபன்யாஸம் செய்வார். இன்று பக்த சரிரம் எந்த பாணியில் சொல்லப்படுகிறதோ அதற்கு மூலகர்த்தா அவர்தான். ப்ரஸித்திபெற்ற ''பக்தமாலீஸ்ரீமாதவதாஸ் பக்தமாலாவை'' கோபால்தாஸ்பாபாவிடம் தான் கற்றார்.

சொல்வதுபோல நடந்தும் காட்டுவார் கோபால்தாஸ்ஜி. இதனால், அவரது குரலில் ஒரு காம்பீர்யம் இருந்தது. அதைக் கேட்கும் மக்களது உள்ளத்தில் ஆழ்ந்த பாதிப்பு ஏற்பட்டு அவர்களது வாழ்வில் ஆசர்யமான மாறுதல்கள் ஏற்படும். அவரிடம் தீக்ஷை பெற்று பக்திமார்க்கத்தில் அனேகர் ஈடுபட்டனர். புகழ்பெற்ற அனேக மஹாத்மாக்கள் இவரது சீடர்களாக இருந்தனர். அவர்களுள் லலிதா ப்ரியாஜி என்னும ஸ்ரீ சுதர்ஸனதாஸ் பாபா மிகவும் முக்கியமானவர். இவர் சிறந்த ரஸிகர். பஜனை பத்ததியை கோபால்தாஸ் பாபாவிடம் தான் இவர் கற்றார். இப்படி ஒளிமயமான வாழ்வை முடித்துக் கொண்டு தனது 84வது வயதில் அவர் தனது உடலைவிட்டு ராதா க்ருஷ்ண நிகுஞ்சத்தை அடைந்தார்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

நாகை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கியிருந்த பல முகாம்களுக்கு நம் ஸ்வாமிஜி நேரில் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

தர்மாத்மா திரு. G.K. ராமமூர்த்தி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட G.S. கல்யாணசுந்தரம் மெடிகல் சென்டரை சேர்ந்த மருத்துவ குழாம், சுனாமியால் பாதிக்கப்பட்ட முகாம்களுக்கு நேரில் சென்று மருத்துவ சிகிச்சையும், இலவச மருந்துகளும் வழங்கினார்கள்.

ஜனவரி 1ம் தேதி அன்று நமது சத்சங்கத்தைச் சேர்ந்த அன்பர்களிடமிருந்து பொருட்கள் சேகரிக்கப்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.